# பேச்சுப் போட்டி - 2024

**ஆண்டு** 3
**(போட்டி நடைபெறும் நாள் 25/05/2024)**

அனைவருக்கும் வணக்கம்.

**தமிழ் மாதங்களும் பண்டிகைகளும்**.

தமிழர்கள் தை மாதத்தில் தைப்பொங்கலைக் கொண்டாடுவார்கள். இது சூரியனுக்கு நன்றி கூறும் பண்டிகை. அன்று பொங்கல் பொங்கி பகிர்ந்து உண்போம்.

சித்திரை மாதத்தில் தமிழ் வருடப்பிறப்பைக் கொண்டாடுவோம். அன்று புத்தாடை அணிவோம். உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வோம்.

இந்த வருடம் றமடான் பண்டிகை சித்திரை மாதத்தில் கொண்டாடப்பட்டது. பண்டிகைக் காலத்தில் நோன்பு இருப்பார்கள்.

ஐப்பசி மாதத்தில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும். தீபங்களை ஏற்றி பட்டாசு வெடித்து மகிழ்வார்கள்.

மார்கழி மாதத்தில் நத்தார் கொண்டாடப்படும். இது இயேசுவின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் பண்டிகை.

தமிழர்கள் வருடம் முழுவதும் பல பண்டிகைகளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவர்

நன்றி. வணக்கம்.